(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது கூட்டத்தொடர்)

**இல. 29.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, செத்தெம்பர் 23, புதன்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0007 / ' 09

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கடந்த மூன்று வருடங்களில் ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டுப் பயணங்களின் எண்ணிக்கையையும்,

(ii) விஜயம் செய்த நாடுகளையும், மற்றும்

(iii) பயணச்சீட்டுக்கள் மற்றும் ஹோட்டல் கட்டணங்கள் என்பவற்றின் செலவுகளுடன் ஒவ்வொரு பயணத்திற்குமான மொத்தச்செலவை வெவ்வேறாகவும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) உடன்சென்ற நபர்களின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் பெயர்கள் மற்றும் அவர்களுக்கென ஏற்பட்ட செலவுகள் என்பவற்றை வெவ்வேறாகவும், அத்துடன்,

(iii) ஒவ்வொரு வெளிநாட்டுப் பயணத்திற்குமான பிரதான காரணத்தையும்

அவர் தெரிவிப்பாரா?

(இ) (i) அப்பயணங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை, மற்றும்

(ii) அப் பயணங்களுக்கென வழங்கப்பட்ட குறை நிரப்புச் செலவினம் என்பவற்றையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0088 /'09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நகர அபிவிருத்தி திட்டத்தின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) நகர அபிவிருத்தி திட்ட பணிகளின் பிரகாரம் 50% வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள நகரம் அல்லது நகரங்கள் இருக்கின்றனவா,

(ii) ஆமெனில், அந்நகரங்கள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0095 / ' 09

3.

கௌரவ ஆர்.பி.ஏ. ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2005,2006,2007 மற்றும் 2008 ஆகிய ஆண்டுகளில் சுயாதீன தொலைக்காட்சி தேர்தலுக்கு முன் விளம்பரங்களை பிரசாரம் செய்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் மூலம் மேற்படி நிறுவனம் ஒவ்வொரு அரசியல் கட்சியிடமிருந்தும், நிறுவனங்கள் மற்றும் ஆட்களிடமிருந்தும் ஈட்டியுள்ள தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி தேர்தலுக்கு முன் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக அறவிடப்படவேண்டியுள்ள தொகை எவ்வளவென்பதையும்,

(ii) இது எந்த கட்சியிடமிருந்து, எந்த நிறுவனத்திடமிருந்து மற்றும் எந்த நபரினது பிரசார நடவடிக்கைகள் சார்பாக என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0182 / '09

4.

கௌரவ பேமசிறி மானகே,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மிஹின் எயார் விமானக் கம்பனி எப்போது தாபிக்கப்பட்டது என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மிஹின் எயார் விமானக் கம்பனியின் தலைவரின் பெயர், முகவரி மற்றும் கல்வித் தகைமைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) குறிப்பிட்ட தலைவர் இப்பதவிக்கு யாரால் நியமிக்கப்பட்டார்;

(ii) அது எப்போது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0284 /'09

5.

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா,— தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கம்பஹா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் 2004 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டு வரை எல்லா வருடங் களிலும் யூன் 30 ஆம் திகதி அன்று தகைமை பெறும் சமுர்த்தி பெறுநர்களின் எண்ணிக்கை யாது,

(ii) இவ்வாறு தகைமை பெற்றவர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை,

(iii) 2004, 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி பெறுநர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வருடங்களில் சமுர்த்தி பெறுநர்களாக இருந்து பின்னர் நீக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களின் பெயர், முகவரி ஆகியவை யாவை,

(ii) இவ்வாறு நீக்கப்பட்டது எவ்வடிப்படையில்,

(iii) புதிதாகச் சேர்ந்த சமுர்த்தி பெறுநர்கள் இருப்பின் அவர்களுக்குச் செலுத்தப்பட்ட தொகை, அவர்களின் முகவரி யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0289 /'09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிருவாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு சொந்தமான திட்டப்பட இலக்கம் 11, உகுவெல பிரதேச செயலாளர் பிரிவின் ரத்வத்தை - கட்டுதெனியவத்தை எனும் காணி, கே. டீ. செனவிரத்ன என்பவருக்கு மதிப்பிடப்பட்டதொரு பணத்தொகைக்கேற்ப சட்ட ரீதியாக உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) திரு. செனவிரத்னவிற்குச் சொந்தமான இக்காணிக்குரிய நுழைவுப் பாதையை அமைத்துக்கொள்வதற்கு வழங்கப்பட்டிருந்த காணிப் பகுதியில் பிரதேச சபையினால் நீர் தாங்கியொன்று அமைக்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) இதன் காரணமாக இப்பாதையை பயன்படுத்துவதில் சிக்கல்கள் எழுந்துள்ள தென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) தற்போது சனசமூக நிலையத்திற்கும் சுகாதார நிலையத்திற்கும் இடையேயுள்ள ஆணைக்குழுவிற்குச் சொந்தமான காணிப்பகுதியை திரு. செனவிரத்னவிற்கு மாற்று வழியாக பயன்படுத்துவதற்கு பெற்றுக் கொடுக்கப்படுமா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0470 / ’09

7.

கௌரவ தயாசிறி ஜயசேகர,— நிதி , திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கைக்கு மதுசாரம் இறக்குமதி செய்வதற்கான உரிமப் பத்திரம் பெற்றுள்ளவர்களால் 2007 ,2008 ஆம் ஆண்டுகளிலும் 2009 ஆம் ஆண்டின் முதற் காலாண்டிலும் இறக்குமதி செய்யப்பட்ட மதுசாரத்தின் அளவு தனித்தனியாக எவ்வளவென்பதையும் ,

(ii) அவற்றின் பெறுமதி எவ்வளவென்பதையும் ,

(iii) ஒவ்வொரு நிறுவனத்தினாலும் அரசாங்கத்துக்கு செலுத்தப்பட்டுள்ள வரித் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) இன்றேல், ஏன் ?

0490 /’09

8.

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கை போக்குவரத்து சபை மக்கள் மயப்படுத்தப்பட்டதன் பின்னர் பலதரப்பட்ட சந்தர்ப்பங்களில் சேவைக் காலத்தை முடித்து ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கான பணிக்கொடை ஒழுங்கான முறையில் வழங்கப்படவில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய ஊழியர்களின் பணிக்கொடையை கணிப்பிடும் போது ஆரம்ப நியமனத் திகதியை பொருட்படுத்தாமல் மக்கள் மயப்படுத்தப்பட்ட திகதி யிலிருந்து கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) இந்த விடயம் தொழில் ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் அது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் 2007.02.12 ஆம் திகதிய 143 / 2003 ஆம் இலக்க வழக்குத் தீர்ப்பின் மூலம் ஆரம்ப நியமத்துக்கமைய கணக்கிடப்பட்ட பணிக்கொடையை செலுத்துமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) இலங்கை போக்குவரத்து சபையை மக்கள் மயப்படுத்தியபோது உலக வங்கி வழங்கிய நிதி உதவிகளில் ஒரு பகுதி இன்னும் பொதுத் திறைசேரியில் இருக்கின்றது என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இலங்கை போக்குவரத்து சபையின் ஊழியர்களுக்கான நிலுவை பணிக் கொடையை வழங்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0493 / ’09

9.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— ஏற்றுமதி அபிவிருத்தி, சர்வதேச வர்த்தக அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை விஞ்ஞாபனத்தில் 50 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழி மூல) “ஆடைக் கைத்தொழில்” விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள, ஆடை ஏற்றுமதியின் சேர்க்கப்பட்ட பெறுமானத்தை அதிகரிப்பதற்கு புடவைகள் தயாரிக்கும் மூன்று வலயங்களை அமைக்க முன்மொழியப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்தப் புடவைகள் தயாரிக்கும் வலயங்கள் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளதா,

(ii) அவ்வாறாயின், அது எந்த மாவட்டத்தில் அல்லது மாகாணத்தில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறு தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த புடவைகள் வலயங்கள் நடைபெறும் உள்நாட்டு உற்பத்திகளில் 2007/ 2008 ஆம் ஆண்டுகளில் ஆடை ஏற்றுமதி வருமானத்துக்குச் சேர்க்கப்பட்ட பெறுமானம் எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0105 / '09

10.

கௌரவ ஆர்.பி.ஏ.ரணவீர பதிரண,— மக்கள் தொடர்பாடல், தகவல் அமைச்சரும் தொழில் முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) தேசிய ரூபவாஹினி 2005, 2006, 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில் தேர்தலுக்கு முந்திய பிரச்சார விளம்பரங்களை பிரச்சாரம் செய்ததென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) இந்நிறுவனம் மேற்படி தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகள் மூலமாக ஒவ்வோர் அரசியல் கட்சி அல்லது நிறுவனம் மற்றும் ஆட்களிடமிருந்து வருடாந்தம் ஈட்டிய பணத்தொகை யாதென்பதையும்,

(ii) இவ்விதமாக தேர்தலுக்கு முந்திய பிரச்சார நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் காரணமாக எவ்வளவு பணத்தொகை அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்,

(iii) எக்கட்சியிடமிருந்து, நிறுவனத்திடமிருந்து, ஆளிடமிருந்து பிரச்சார நடவடிக்கைகளுக்காக இவ்விதமாக அறவிடப்பட வேண்டியுள்ள தென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன்?

0189 / '09

11.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வள மூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) 2008ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இற்றைவரை வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் இந்நாட்டுத் துறைமுகங்களின் ஊடாக கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களின் தொகை எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளினால் கொண்டுவரப்பட்ட மூன்றாம் தர மீன்களில் கடற்றொழில் கூட்டுத்தாபனம் கொள்வனவு செய்த தொகை யாது,

(ii) அதன் பெறுமதி எவ்வளவு,

(iii) வெளிநாட்டு மீன்பிடிப் படகுகளிலிருந்து இவ்வாறு கொள்வனவு செய்த ஒரு கிலோகிறாம் மீனின் விலை யாது,

(iv) மேற்படி ஒரு கிலோகிறாம் மீனின் விற்பனை விலை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0282 / '09

12.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) யப்பானிய வெளிநாட்டு பொருளாதார சேவைகள் நிதியத்தினால் ரூபா. 256,914,765/= செலவிடப்பட்டு புகையிரத வீதிகள் புனரமைப்புக்கான கருத்திட்டமாக ஆரம்பிக்கப்பட்ட அம்பேபுஸ்ஸ கல் உடைத்தல் கருத்திட்டத்தின் இயந்திரங்கள் மற்றும் பொறித்தொகுதிகள் செயலிழந்த தனால் 2007 ஆம் ஆண்டு 253 நாட்கள் உற்பத்தி நடவடிக்கைகள் ஸ்தம்பிதம் அடைந்து இருந்தது என்பதையும்,

(ii) இதன்படி 2007 இல் உற்பத்தி இலக்குகளில் 34% அளவு மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதையும்,

(iii) எனவே, ரூபா 33,808,358/= பெறுமதியான கருங்கற்களை வெளிவாரி நபர்களிடமிருந்து கொள்வனவு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்கூறிய நிலைமையின் கீழ் குறிப்பிட்ட கருத்திட்டத்தினால் 2007 இல் மேலதிக நேரக் கொடுப்பனவு மற்றும் பிரயாணச்செலவு கொடுப்பனவுக்காக ரூபா. 4,457,356 /= செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்,

(ii) அதன்படி, உற்பத்தியின் அளவு மற்றும் மேலதிக நேர கொடுப்பனவு செலுத்தல் தொடர்பாக முரண்பாடுகள் இருப்பதையும்

அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

0294 /'09

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009, மே, 15 இற்கு முன்பு ஒவ்வொரு நாடும் தனது கடற்படுகை உரிமை தொடர்பாக உரிமைக் கோரிக்கையை விடுக்க வேண்டுமென்பதை அவர் அறிவாரா?

(ஆ) அவ்வாறு இவ்அமைச்சு செய்துள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(இ) ஆம் எனில், சம்பந்தப்பட்ட சர்வதேச அமைப்பிற்கு சமர்ப்பித்த கோரிக்கையை சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஈ) (i) புதிதாக உரிமைக்கோரிக்கை விடுக்கப்பட்ட பகுதியின் பரப்பளவு எத்தனை சதுர கிலோமீற்றர் என்பதையும்,

(ii) ஐக்கிய நாடுகள் சபை அல்லது பொருத்தமான உலக அமைப்பினால் உத்தியோகபூர்வமாக அது அங்கீகரிக்கப்படும் திகதி என்ன என்பதையம்,

அவர் மேலும் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0114 /'09

14.

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பதிரண,— தேசத்தை கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) தேசத்தை கட்டியெழுப்புவதற்கான அமைச்சின் கீழ் பிராந்திய இலக்கம் 02 இன் கீழ் வருகின்ற கொழும்பு, கம்பஹ, களுத்துறை, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களின் சமூக நலன்புரி கருத்திட்டங்களின் பொருட்டு 2006, 2007, 2008, மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்காக தனித்தனியாக ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) மேற்படி கருத்திட்டத்தின் வேலைகள் முடிவடைந்திருப்பின் வேலை ஆரம்பிக்கப்பட்ட திகதி, வேலை முடிவடைந்த திகதி, மதிப்பிடப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்டுள்ள முழுத்தொகை தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா ?

(இ) (i) மேற்படி கருத்திட்டத்தின் கீழ் பயன்பெறுனர் குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்,

(ii) 2009 ஆம் ஆண்டுக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள கருத்திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்டுள்ள தொகை தனித்தனியாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(ஈ) இன்றேல், ஏன் ?

0236 / '09

15.

கௌரவ பேமசிறி மானகே,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2008 நவம்பர் 01 ஆம் திகதி முதல் 2009 மார்ச் 16 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சின் ஆலோசனைக் குழு எத்தனை தடவைகள் கூட்டப்பட்டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அவ்வாறு கூட்டப்பட்ட திகதிகள் யாவை என்பதையும்,

(ii) கூட்டப்படாவிடின் அதற்கான காரணம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இந்த அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டம் சம்பந்தமான எதிர்கால கால அட்டவணையை அவர் இச்சபைக்கு சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபை முதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி. ப. 1.30 மணிக்கு 7 (5) ஆம் இலக்க நிலையியற் கட்டளை தொழிற்படுமாக.

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 285, நிகழ்ச்சித்திட்டம் 1,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் அறுபத்து எட்டு கோடி ஐம்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து தொளாயிரத்து முப்பத்து எட்டு (ரூபா 68,53,93,938) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 285 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 01 | — | கமத்தொழில் அபிவிருத்தி மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 68,53,93,938 |
| | | | ரூ. 68,53,93,938 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 10 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 18,845,510,000.

*2.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

தொழில் உறவுகள், மனித வலு அமைச்சர்,— வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2005 ஆம் ஆண்டின் 36 ஆம் இலக்க வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப் படிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் தொழில் உறவுகள், மனித வலு அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 மே 19 திகதிய 1602/6 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தும் 2009. 09.08 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*5.

போக்குவரத்து அமைச்சர்,— தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதி,— 1991 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தின் 46 ஏ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படு அச்சட்டத்தின் 44 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 மே மாதம் 29 ஆம் திகதிய 1603 /44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2009.09.10 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதி அங்கீகரிக்கப்படுமாக.

*6.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*9.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*10.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*12.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*13.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*14.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*15.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*16.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*17.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*18.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*19.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*21.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*22.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு | |
| நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*26.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*27.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*28.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*29.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்டும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

30.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

இலங்கை பொருளியற் கழகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

33.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

34.

கிராமிய வேலையாட்கள் மற்றும் ஒன்றிணைந்த கிராமிய வளங்கள் அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.